உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி–1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**

முனைவர் **க.சுஜாதா**

முனைவர் **க.இந்துமதி**

முனைவர் **சி.சங்கீதா**

**செ.தமிழரசி**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் – மலேசியா.**

---

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-10

உள்ளத்தனையது உயர்வு

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோவில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**
முனைவர் **க.சுஜாதா**
முனைவர் **க.இந்துமதி**
முனைவர் **சி.சங்கீதா**
**செ.தமிழரசி**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
தொலைபேசி: 04362268167
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 318

விலை : ரூ.250/–

ISBN : **978-81-909877-5-2**

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

# திருவள்ளுவர் காட்டும் சமூகத்தில் பழி

சாந்தினி அருளானந்தம்

19

சங்கமருவியகால இலக்கியங்களில் தனித்துவமானதும் இன்றுவரை மதித்துப் போற்றப்படுவதுமான ஓர் இலக்கியமே திருக்குறளாகும். இவ்விலக்கியத்தில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டமைக்க வல்லவையாகும். இவ்விலக்கியத்தில் அறம்,பொருள், இன்பம் என்ற மூன்று விடயங்களிலும் சமூகநலமே மேலோங்கியிருப்பதைக் காணலாம். அரசனும், அவன் சார்ந்த விடயங்களும் சமூகத்தோடு தொடர்புடையதும், கட்டுப்பாடான அமைதியான வாழ்வினை நிலைநாட்டுவதும் என்ற அடிப்படையில் சமூகத்தின் பாற்படுத்தி நோக்கத்தக்கதாகும். சமூகம் என்பது பல்வேறுபட்ட அதேநேரம் தமக்குள் ஏதோ வகையிலான இணைப்பினைக் கட்டமைத்து, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தம்மை ஒருங்கிணைத்து வாழும் தன்மையுடையதாகும். அதில் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காகவும், அமைதியைக் கடைப்பிடிப்பதற்காகவும் சில கட்டுப்பாடுகளும் நடைமுறைகளும் பேணப்படுவது கூட்டுவாழ்வில் இனங்காணும் அம்சமாகும். சமயநெறிமுறைகள் கூட இத்தகைய பின்புலத்தைக் கொண்டுள்ளன.

திருக்குறளைப் பொறுத்தவரை சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்கள் கூறும் துறவறத்தைதையோ, நீதிநூல்கள் முன்வைத்த கடுமையான விதிமுறைகளையோ முதன்மைப்படுத்தாது அறநெறியோடு கூடிய இல்லறவாழ்வினை முதன்மைப்படுத்துவதைக் காணலாம். அவர் கையாளும் சொற்கள் மனிதவாழ்வினை எச்சரிக்கையோடு முன்னெடுக்கும் தன்மை கொண்டவாகவுள்ளன. குறிப்பாக பழி என்ற சொல் ஒருவரைக் கட்டுப்படுத்தும் ]சொல்லாக திருக்குறளில் நோக்கப்பட்டுள்ளதெனலாம். இச்சொல் சமயக் கோட்பாடுகளோடும்

சமூகவழக்குகளோடும் நெருங்கிய சொல்லாக அடையாளம் காணத்தக்கதாகும். அதுமட்டுமன்றி விழுமியங்களோடும் நீதியோடும் தொடர்புடையாதாக திருக்குறளில் பழி என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது. திருவள்ளுவர் காட்டும் சமூகத்தில் பழி பற்றிய எண்ணப்பாங்கு மேற்கூறியவாறு இருந்துள்ளதை திருக்குறளிலிருந்து அறியமுடிகின்றது.

பழி என்னும் சொல் வடஇந்திய நீதி மற்றும் பொருளாதார நூல்களில் வலியுறுத்தப்படாத நிலையில் தென்னிந்திய குறிப்பாகத் தமிழக இலக்கியமான திருக்குறளில் கையாளப்பட்டிருப்பது கவனத்திற்குரியதாகும். பொதுவாக வடஇந்திய நூல்களில் பழி என்பது பழிக்குப்பழி என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தமிழரிடையே அப்பதம் பெறுமதி மிக்கதாகவும் ஆழமானதாகவும் பலநிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்ககால இலக்கியங்களில் **'பிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே' (புறம்.10), மாவெனமடலொடு மறுகில்தோன்றித் தெற்றெனத் தூற்றலும் பழியே: வாழ்தெலும் பழியே' (குறு:32)** என்பன எடுத்துக்காட்டுக்களாகும்.

சிலப்பதிகாரத்தில்

**'பழிதூற்றுங் குடியதே மாமதுரைக் கம்பலைமாக்கள் தாங்காட்ட'** எனக் குறிப்பிடப்படுவதானது, பழிக்குரிய மதுரை மக்களை 'மாக்கள்' எனக் கருதியதைக் காணலாம். மதுரைத்தமிழ் அகராதியில் பழி என்ற சொல்லுக்கு குற்றம், நிந்தை, பழியென்னேவல், பொய், பொல்லாங்கு, வயிராக்கியம், விரோதம், அலர், சலங்சாதிப்பு போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. பழி என்ற முதற் சொல்லை அடிப்படையாகக்கொண்டு பழிகட்டுதல் பழிகிடத்தல், பழிக்குனர் (பகைவர்), பழிகூறல், பழிசுமத்தல், பழிசூழ்தல், பழிசெய்தல் (தீங்குசெய்தல்), பழிச்சொல் (வசைச்சொல்), பழிதீர்த்தல் (பொல்லாங்குதீர்த்தல், பகையொழிதல்), பழிதூற்றல் (குறை கூறுதல்), பழித்தல் (இழிவாகப்பேசுதல்), பழிநாணல் (பழி பாவத்துக்கு அஞ்சுதல், பழிபாதகம்), பழிபிடித்தல் (விரோதம்காட்டுதல்), பழிபோடுதல் (பழி சுமத்துதல்), பழிமுடிதல் (விரோதம்நாட்டுதல்), பழிமூட்டுதல் (கோள்மூட்டுதல்), பழிவாங்கல் (தீமைக்குத்தீமை செய்தல்) போன்ற சொற்றொடர்கள் பயன்பாட்டில் இருந்ததைத் மதுரைத் தமிழ்ப்பேரகராதி எடுத்துக்காட்டுகின்றது.

பழிமொழி (புறங்கூறல்), பழிப்பு (நிந்தை,பழி), பழிவிழுதல் (பழிசுமத்துதல்), பழிவேலை (வேண்டாவெறுப்பான வேலை), பழிவைத்தல் (பழிப்படுத்திச் சொல்லல்) போன்றனவும் வழக்கில் இருந்ததை யாழ்ப்பாண அகராதி வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே தமிழரிடையே பழி என்ற சொல் முக்கியத்துவம் பெற்றிருந்த ஒரு சொல் என்பதை விளங்கிக் கொள்ளலாம். திருவள்ளுவர் அறத்துப்பாலில் 10குறட்பாக்கள், பொருட்பாலில் 10 குறட்பாக்கள,; காமத்துப்பாலில் ஒரு குறட்பா மூலம் பழி பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றார். இல்லறவாழ்வு, துறவறவாழ்வு, அரசியல், இன்பம் போன்றன மனிதவாழ்வின் முக்கிய அங்கங்களாகும். இவற்றை மையப்படுத்தியே பழி என்னும் சொல்லைப் பயன்படுத்துவதால் சிறந்த சமூகவாழ்வுக்கு அச்சொல்லை திருவள்ளுவர் கையாண்டுள்ளார் எனலாம். இல்வாழ்க்கை, பிறனில்விழையாமை, வினைத்தூய்மை ஆகிய அதிகாரங்களில் இரு தடவைகள் பழி பற்றிய கருத்தினை முன்வைப்பதனால் ஒழுக்கமான சமூகத்தையே அழுத்திக் கூறுகிறார் எனலாம். சங்க கால இறுதியில் தமிழக சமூகவாழ்வில் ஏற்பட்ட சீர்கேடுகளை நீக்குவதற்கு பழி என்ற கருத்தை வள்ளுவர் வலியுறுத்த வேண்டியிருந்ததெனலாம்.

ஒரு சமுதாயத்தில் மொழி வழக்கு என்பது அச்சமுதாயத்தின் அடித்தளமாக அமையும் ஒரு பிரதான கூறாகும். தமிழ்மொழியின் நீண்ட வழக்காறுகளையும், பாரம்பரியத்தையும் திருக்குறள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அவ்வகையில் பழி என்னும் சொல் ஆழமான தொடர்ச்சியான வழக்காக இருந்து வந்துள்ளதை மேலே கண்டோம். இலக்கண ரீதியாக பழி என்ற பதத்தை வள்ளுவர் கையளும் விதத்தை நோக்கலாம் பழி என்பது வினையாகவும் பெயராகவும் வரும் சொல்லாகும். புழித்தல் என்பது வினைச்சொல். பழி என்ற பெயர்ச்சொல்லோடு வினைச்சொற்களை இணைத்துப் புதிய சொற்றொடர்களைத் தருவதன் ஊடாக பழி என்பது விலக்கப்படவேண்டியது என்பதை வலியுறுத்துகின்றார். பழியஞ்சல் (44), பழிபிறங்குதல் (62), பழிபடுதல் (172), பழிநாணுதல் (433), (794), பழிமலைதல் (பொருதல், மலர்சூடுதல்) (657), பழிநோக்குதல் (865), பழிகாணுதல் (1285) என்ற சொற்றொடர்கள் வள்ளுவத்தில் இடம்பெறுகின்றன. முறையே பழிஅஞ்சுதல் என்பது பழி செய்வதற்கு அஞ்சுதல், பயம்கொள்ளுதல் என்பதையும்,

பழிபிறங்குதல் என்பது பழிக்கு நிலைமாறுதல், பழிமிகுதல், பழிபெருகுதல் என்பதையும், பழிபடுதல் என்பது மிக இழிவாகக் குற்றப்படுதல் என்பதையும், பழிநாணுதல் என்பது பழிக்குஅஞ் சல் என்பதையும், பழிமலைதல் என்பது மாறுபடுதல் அல்லது பழிசுமத்தல் என்பதையும், பழிநோக்குதல் என்பது பழியை எதிர்கொள்ளல், ஒருவர்மீது பழியை அடையாளப்படுத்தல் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. இவற்றிலிருந்து பழி என்ற சொல்லின் பொருண்மையை விளக்குவதற்காகப் பல சொற்களை அதனுடன் இணைத்துப் பயன்படுத்தியுள்ளமை தமிழர் சமூகத்தை நன்னெறியில் கொண்டு செல்லும் ஒருமுயற்சியாகவே நோக்கமுடிகின்றது. அதுமட்டுமன்றி பழி என்பது பாவம் என்ற சொல்லோடு இணைக்கப்பட்டு தொடர்மொழியாவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வள்ளுவர் **“பகைபாவ மச்சம் பழியென நான்கு மிகவாவா மில்லிறப்பான் கண்”(146)** என்ற குறளில் பாவம் என்பதைப் பகை என்பதோடும், அச்சத்தை அடுத்துப் பழி என்பதையும் கூறியுள்ளார். பாவம்பழி என்ற தொடர்மொழியும் தமிழரிடையே வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே தமிழரின் மொழி வளத்தையும் சொல்லாக்கத்தையும் அதற்கு அடிப்படையாகவுள்ள இலக்கணத் தமிழையும் விளங்கிக் கொள்ளும்வகையில் பழி என்னும் சொல் திருக்குறளில் இடம்பெறுவதைக் காணலாம். அதேவேளை இச்சொற்றொடர்கள்; ஊடாக பழி என்ற செயற்பாடு விரும்பத்தக்கதல்ல என்பதை வள்ளுவர் சுட்டிக்காட்டுகின்றார். நல்லவற்றைச் சிந்தித்து, நல்லவற்றை மட்டுமே செய்யும் சமூகத்தின் உருவாக்கம் அக்காலத் தேவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருவள்ளுவர் சமூகத்தில் பேணப்படும் ஒழுங்கீனங்களைச் சீரமைக்கும் முகமாக ஒழுக்கம், குடி, தாய், வறுமை என்பதனோடு தொடர்புபடுத்தி பழி என்ற சொல்லைத் தருகின்றார். மனத்தின் அகம்சார்ந்தும், புறம்சார்ந்தும் நற்செயல்களைச் செய்வதே அறம்: அவையே ஒருவனால் செய்யப்படவேண்டியவை. கைவிடவேண்டியது தீயசெயல்களையே என்று அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் இறுதிக் குறளில் குறிப்பிடுகின்றார். “செயற்பாலதோரும் அறனே ஒருவற்கு உயற்பால தோரும்பழி”(40). திருக்குறளில் ஒரு அதிகாரத்தின் இறுதிக்குறள் அவ்வதிகாரத்தின் முடிந்தமுடிபாக வலியுறுத்தப்படும். அவ்வகையில் அறம் என்பது

நற்செயல்களே என்பது வற்புறுத்தப்படுகின்து. அவை தவிர்ந்த தீச்செயல்கள் யாவும் பழிக்கப்பட வேண்டியவை என்பதே வள்ளுவர் கருத்தாக அமைகின்றது. ஒழுக்கமுடைமையில் இதனை ஆணித்தரமாக **"ஒழுக்கத்தின் எய்துவர்மேன்மை யிழுக்கத்தின் னெய்துவரெய்தாப்பழி"** எனக் குறிப்பிடுகின்றார். ஒமுக்கத்தின் மேன்மையை எடுத்துக்காட்டுவதற்காக **"திணைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாகக் கொள்வர் பழி நாணுவார்" (433)** என்ற குறளை முன்வைக்கின்றார். குற்றம் செய்வதற்கு அச்சம் கொள்பவர்கள் மிகச்சிறிய குற்றம் செய்தாலும் மிகப்பெரியளவில் வருந்துவர் எனக் கூறுவதன் பின்னணியில் பழி தரும் செயற்பாடுகளைச் செய்யாமல் இருப்பதையே குறிப்பால் உணர்த்துகின்றார். மொட்டையடித்தும், தாடிவைத்தும் துறவிகளாகத் தேவையில்லை: பழி எனக் கருதப்பட்டவற்றை விலக்கி ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதே போதுமானது(280) என்பதனூடாகப் போலித்துறவினை கண்டித்து சமூக ஒழுங்கினை நிலைநிறுத்த முற்படுகின்றார்.

மனித உறவுகளில் மேம்பட்ட உறவான தாய் பிள்ளை உறவினை குறிப்பிடுவதன் வாயிலாக பழி என்பது செய்யத்தகாததென எடுத்துரைக்கப்படுகின்றது. தன் தாய் பசியால் வருந்தினாலும் ஒருவன் வறுமை காரணமாகச் சான்றோர்கள் பழிக்கத்தக்க காரியத்தைச் செய்தலாது(656) என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. பழிநிறைந்த செய்கையால் பெற்ற வருமானத்தைக் காட்டிலும் ஏழ்மையே சிறந்ததென்பது (657) பிறிதொரு குறள்மூலம் குறிப்பிடப்படுகின்றது. பழிபற்றிய நோக்கில் குடி என்பதும் செல்வாக்குச் செலுத்துவதை திருக்குறளில் காணமுடிகின்றது. குடி என்பது பல குடும்பங்கள் அடங்கிய கூட்டுக்குடும்பத்தைச் சுட்டுவதையும், இனம் அல்லது சமூகம் என்ற பொருளில் வழங்கப்படுவதையும் காணலாம். பழி என்ற தீச்செயலை மேற்கொள்கொள்பவன் தான்மட்டும் இதனால் பாதிக்கப்படமாட்டான். அவன் சார்ந்த குடும்பமும், அவனது இனம் அல்லது சமூகமும் களங்கமுடையதாகிவிடும். **"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"(44)** என்ற குறளில் பழிபாவத்துக்கு அஞ்சி பொருளைச் சேர்த்து, அதனைப் பிறருக்குப் பகிர்ந்து உண்பவனின் பரம்பரையானது என்றும் நிலைத்து நிற்கும். வழியெஞ்சல் என்பதன் வாயிலாக அவன் வழியாகிய சந்ததியினர் தொடர்ந்து நிலைபெற்று வாழ்வர் எனக்

குறிப்பிடுகின்றார். நல்லகுடியில் பிறந்து பழிக்கு அஞ்சுபவனை எதைக்கொடுத்தாவது பெற்றுக்கொள்ள வேண்டும்(794) எனக் கூறுவதை நோக்கின் நற்குடியில் பிறந்திருத்தல் மட்டும் போதாது பழி செய்வதற்கு வெட்கப்படுபவனாகவும் இருக்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது. நீதிநூல் வழியறியாதவன், அதில் கூறப்பட்டவாறு நடக்காதவன், பழியைப் பற்றி கவலைப்படாதவன், நற்குணங்கள் இல்லாதவன் என்ற இயல்புகளைக் கொண்டவனைப் பகைவர்கள் எளிதில் வெற்றிபெறுவர்(865) என்பது வள்ளுவரின் நம்பிக்கை. திருவள்ளுவர் தன்பழி, பிறர்பழி என இருவகையான பழிகளைப்பற்றி மூன்று குறட்பாட்கள் வாயிலாக எடுத்துரைக்கின்றார். **"பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு உறைபதி என்னும் உலகு"** ***(1015)*** அதாவது தனக்கேற்பட்ட பழிக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக்கு ஏற்பட்ட பழியை தமக்கேற்பட்டதுபோல நாணம் கொள்ளபவரை இந்த உலகம் நாணத்துக்கு உறைவிடமானவர் எனக் கொள்ளும் என்கிறார். இங்கு தான், தனது குடி, தனது நாடு என்பவற்றுக்கு அப்பால் உலகம் என்ற நிலைக்கு அவ்வாறானவரை வள்ளுவர் கொண்டு செல்கின்றார்.

பொதுவாக உலகம், உலகு என்ற பதங்கள் வாயிலாக உலகப்பொதுமையை காணும் வள்ளுவர் பழி தொடர்பாகவும் அதனைச் சுட்டுகின்றாரெனலாம். இக்கருத்துக்களை முன் வைப்பதன் வாயிலாக வள்ளுவர் ஒழுக்கமுள்ள ஒரு சமூகம் பற்றிய எண்ணக்கருவை பழி என்ற பதத்தினூடாக முன்வைக்கத் துடிப்பதைக் காணமுடிகின்றது.

பழி என்பது மறுபிறப்புக் கொள்கையோடும் தொடர்புபடுத்தி நோக்குவதை தமிழர் மரபிற் காணலாம். பழி செய்பவன் அதற்குரிய தண்டணையை இவ்வுலகில் மட்டுமல்லாது மறுவுலகிலும் பெறுகின்றான் என்பது தமிழர் நம்பிக்கை. வள்ளுவரும் அவ்வாறான ஒரு குறிப்பினை "எழுபிறப்பிலும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட்பெறின்"(62). பழிக்குட்படாத நற்குணங்களையுடைய பிள்ளைகளை ஒருவன் பெற்றிருந்தால் அவனை ஏழு பிறப்பிலும் அல்லது எழுகின்ற ஒவ்வொரு பிறப்பிலும் துன்பம் தொடராது. இன்றும் ஒருவரின் தீச்செயல்கள் பிள்ளைகளை மட்டுமல்ல தொடர்ந்துவரும் பரம்பரையையும் பாதிக்கும் என்ற நம்பிக்கை நிலவுவது

குறிப்பிடத்தக்கது. குற்றம் என்ற நோக்கில் சட்டத்துறையிலும் பாவம்பழி மற்றும் கழுவாய் அல்லது பரிகாரம் என்ற நோக்கில் கீழைத்தேய தத்துவம் மற்றும் சமயத்திலும் பரவலாக வழக்கில் வழங்கி வருகின்ற பழி என்னும் சொல் நீண்டகாலமாகத் தமிழர் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்துவந்துள்ளதை திருக்குறள் எடுத்துக்காட்டுகின்றதெனலாம். நேரடியாகப் பழி என்ற சொல் மட்டுமல்லாது புகழ், குற்றம் கடிதல், அலர் அறிவுறுத்தல் போன்ற சில அதிகாரங்களிலும் பழிக்கு எதிரான கருத்துக்களை வள்ளுவர் கூறுகின்றார். வடு, வசை, தவறு, எள்ளுதல், இழுக்கம், தூற்றுதல், மானம் என்ற பதங்களையும் வள்ளுவர் ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளார், எனவே வள்ளுவர் சிறந்த ஒரு சமூகத்தை உருவாக்கும் வகையில் குறிப்பாக மனிதரிடையே தீமையைக் கட்டுப்படுத்தும் வகையில் பழி என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் எனலாம். அதாவது பழிச் செயலற்ற சமூகமே வள்ளுவர் காட்டும் சிறந்த சமூகம் என்பது தெளிவுபெறுகின்றது.

**சாந்தினி அருளானந்தம்**
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
இலங்கை